**04.08.2023 அ.வ.எண்.37/2014 வா.சா.1 முத்தையாலு, த/பெ.குப்புசாமி**

**குறுக்கு விசாரணை 1, 2 பிரதிவாதிகள் தரப்பு**

நான் ஆசிரியர் பயிற்சி முடித்து 37 வருடங்கள் அரசுப்பள்ளி ஆசிரியராக பணிபுரிந்துள்ளேன். என் தந்தைக்கு நானும் என் அண்ணன் கிருஷ்ண கவுண்டரும் மகன்கள் ஆவர். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் சொத்துக்கள் புல எண்கள்.58/1ஏ மற்றும் 58/1பி -ல் உள்ளது. அது மொத்தம் 90 செண்ட் நான் 20 செண்டு என் தந்தை கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையம் வாங்கிய நிலத்தின் நான்கெல்லை ஏரிக்கால்வாய்க்கு வடக்கு, கண்ணக்கவுண்டர் நிலத்திற்கு தெற்கு மற்றும் கிழக்கு, கங்கம்மாள் நிலத்திற்கு மேற்கு ஆகும். என் தந்தை மேற்படி கிரையத்தை ஒரே பத்திரத்தின் மூலம்தான் பெற்றார். 1976ல் நானும் என் அண்ணனும் சொத்துக்களை கூர்சீட்டு மூலம் பிரித்துக் கொண்டோம். பாகப்பிரிவினையில் 20 செண்டில் 8 செண்ட் என் அண்ணனுக்கும், 12 செண்ட் எனக்கும் ஒதுக்கப்பட்டது. என் தந்தை கிரையம் வாங்கிய சொத்துக்கு 10 செண்ட்டுக்கு மட்டும் என் தந்தை பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது. அதன் எண்.162 ஆகும். டிசம்பர் 1999ல் என் அண்ணன் பாகம் 8 செண்டையும் நான் கிரையம் பெற்றுவிட்டேன். 20 செண்டுக்கும் பட்டா கேட்டு பல முறை முயன்றேன். ஆனால் எனக்கு பட்டா கொடுக்கவில்லை. ஏன் பட்டா கொடுக்கவில்லை எனக் கேட்டால் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு எதிராக கால்வாய் தோண்டியது சம்மந்தமான வழக்கு ஒன்றை நான் தாக்கல் செய்ததால் எனக்கு பட்டா கொடுக்க மறுக்கிறார்கள். எனக்கு 3 பிள்ளைகள். 2ம் வாதி என் மூத்த மகன். மற்ற 2 பிள்ளைகளும் என்னுடன்தான் உள்ளனர். வழக்கு சொத்தை 2ம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்பது சரிதான். ஏன் தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன் எனக் கேட்டால் என் பெயரில் பட்டா பெற இயலவில்லை என்பதால் 2ம் வாதி பெயரில் பட்டா பெற தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன். இந்த வழக்கை என்னுடைய ஏற்பாட்டின் பேரில்தான் தாக்கல் செய்தோம். நான் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் வா.த.சா.ஆ.5ல் என் தந்தைக்கு நான் மட்டுமே வாரிசு என சொல்லப்பட்டுள்ளது என்பது சரிதான். ஆவண எழுத்தர் அவ்வாறு தவறாக எழுதியுள்ளார். புல எண்கள்.58/1ஏ மற்றும் 58/1பி-க்கு சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காகத்தான் 2ம் வாதியிடம் அதிகாரம் பெற்றுள்ளேன். வழக்கு சொத்தை நான்தான் விவசாயம் செய்கிறேன். ஏரிப்பாசனமும் உண்டு. கிணற்று பாசனமும் உண்டு. தாவா புல எண்.58ல் மேலும் 9 செண்ட் கண்ண கவுண்டருக்கும், மேலும் ஒரு 9 செண்ட் அவரது மனைவிக்கும் 5 செண்ட் கோட்ட முத்துவிற்கும் பாத்தியம். மீதத்தை பொறுத்து குப்புசெட்டி முனிகான் செட்டிக்கு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் அந்த மீத நிலம் கங்கம்மாள் என்பவருக்கு பாத்தியம். கங்கம்மாளுக்கு அவரது கணவர் தொப்பளான் செட்டி 70 செண்ட் எழுதி வைத்துள்ளார்.

என் தந்தை கிரையம் பெற்ற வா.த.சா.ஆ.1ல் தொப்ளான் செட்டி புல எண்.58/1ஏ-ல் அவரது பாகம் பொதுவில் 9 செண்ட் என்று சொல்லிதான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் அளவை மேற்கொண்ட போது நான் உடனில்லை. வழக்கு சொத்துக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. கங்கம்மாள் மற்றும் முனியம்மாள் பெயரில் பட்டா உள்ளதா எனக் கேட்டால் 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது. பின்னர் அதனையும் ரத்து செய்து 90 செண்டுக்கும் 1ம் பிரதிவாதி பட்டா பெற்றுள்ளார். கங்கம்மாளுக்கு 2ம் நிலை வாரிசுகளும் யாரும் இல்லை. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியது 2005ம் வருடம் ஆகும். அவர் முனிக்கான் செட்டியின் அண்ணன் மருமகனிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விவரத்தை தெரிந்துகொண்ட உடன் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா எனக் கேட்டால் ஆமாம். 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. முனியம்மாள் மற்றும் ஜெயராமன் பட்டா கேட்ட போதும் அவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. நில அபகரிப்பு பிரிவில் நான் கொடுத்த மனுவின் நகல் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் ஞாபகம் இல்லை. போலீசார் விசாரித்த போது 1ம் பிரதிவாதி சரியான முறையில் தான் கிரையம் பெற்றுள்ளார் எனக் கண்டறிந்து எனது புகாரை முடித்துவிட்டனர் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பிறகு போலீசார் அறிவுறுத்தியபடி அளவை செய்யப்பட்டது என்பது சரிதான். அளவை கற்களை பின்னிட்டு 15 நாட்கள் கழித்து நான் பிடிங்கிவிட்டேன் என்பது சரியல்ல. சரியான முறையில் அளந்து காட்டவில்லை அதனால் நான் அதனை ஏற்கவில்லை. கிரையம் பெற்ற பிறகு 1ம் பிரதிவாதி தன் பெயருக்கு பட்டா பெற்றுள்ளார் என்றால் அவர் அரசியல்வாதி அந்த செல்வாக்கால் பட்டா பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டா கூட்டுப்பட்டா என்பதும் ஒரு கண்ணகவுண்டர் என்பவர் பெயரோடு 1ம் பிரதிவாதி பெயருக்கும் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பது சரிதான். அந்த கண்ணகவுண்டரை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. எனக்கு பட்டா கொடுக்காதது சம்மந்தமாக கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்தேனா எனக் கேட்டால் கொடுத்துள்ளேன். ஆனால் எனக்கு பதில் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு 12 செண்டு மட்டும் தான் பாத்தியம் என்றும் 20 செண்டு என சொல்லி 1ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. தவறான சங்கதிகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**